நாள் – 27.08.2024 CC.268/2021

அ.சா.1 மீனா, த–பெ இராஜேந்திரன்

கு.ப.ம.எண். 2718/2023 , நாள் 08.08.2023 மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் MSC Maths படித்துள்ளேன். நான் நீலகிரி பஞ்சாயத்தில் மின்சார வாரியத்தில் கணக்கீட்டாளராக பணியாற்றி வருகின்றேன். எனது அலுவலக நேரம் காலை 8.30 ஆரம்பமாகும். அ.சா.2 சதீஷ் எனது சகோதரியின் கணவராவார். அ.சா.3 அழகர் எனது சகோதரரின் மாமனார் என்றால் சரிதான். அ.சா.4 ராதிகா எனது உறவுக்காரர் நாத்தனார் என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் துறை அதிகாரி புகாரை மருத்துவனையில் வாங்கினார் என்றால் நான்தான் புகார் கொடுத்தேன், எனது கணவர் சுய நினைவு இல்லாமல் இருந்தார். 07.08.2021ம் தேதி மாலை போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர்.

நீதிமன்றத்தில் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் சரியாக சாட்சியம் அளித்துள்ளீர்களா என்றால் நான் எனக்கு தெரிந்ததை சாட்சியம் அளித்துள்ளேன். விபத்து சமயத்தில் கார் ஒன்று வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது கணவரை மருத்துவமனையில்தான் பார்த்தேன். என்னுடன் சதீஷ், அழகர் ஆகியோர் எனக்கு தகவல் கொடுத்தார்கள். அவர்கள்தான் எனது கணவரை மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு

வந்தார்கள். விபத்து சமயத்தில் ஒரு கார் வந்ததாக கூறியுள்ளேன், அந்த கார்தான் விபத்து ஏற்படுத்திய கார் ஆகும் என்றும், ஆஜர் எதிரி அதன் பின்னர் வந்ததால் தவறுதலாக அவர் மீது புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கும், ஆஜர் எதிரிதான் விபத்தினை ஏற்படுத்தினார் என்று பொய்யாக சாட்சியம் அளிகின்றேன் என்று சொன்னால் சரியல்ல.